இதோடு இந்த அறிக்கையை நான் ஆளுகைக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி, அவர்களுடைய கருத்தையும் பெற்று, தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப் பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க் கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

22–3–1984 (வியாழன்) ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பொதுச் சுகா தாரம் மற்றும் மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலாக —

எண் 31 — பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் மற்றும்

எண் 44 — எழுதுபொருள், அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

26–3–1984 (திங்கள்) ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் மற்றும் எழுது பொருள், அச்சுத்துறை ஆகிய மானியக் கோரிக்கை களுக்குப் பதிலாக கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

எண் 1 — நிலவரித் துறை

எண் 41 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

எண் 46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

எண் 11 — மாவட்ட நிர்வாகம்

22–3–1984 அன்று பிற்பகல் பேரவைக் கூட்டம் இருக்காது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20–3–1984 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.